6. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 1—4—1987 ஆம் தேதியன்றும், மானியக்கோரிக்கைகள் 20—வேளாண்மை. 49—குடிநீர் வழங்கல், 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு 2—4—1987 ஆம் தேதியன்றும் மற்றும் மானியக் கோரிக்கைகள் எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும், எண். 33—வீட்டு வசதி மற்றும் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி ஆகியவை 10—4—1987 ஆம் தேதியன்றும் விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்படும்.

5. வரவு-செலவுத்திட்டம் 1987-88, பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அளித்திருக்கிற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து. என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிதிநிலை பற்றி கருத்து தெரிவித்த ஒருசில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று குறை கூறினார்கள். மேலும் புதிதாக வரியைப் போட்டு விட்டார்கள் என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, புரட்சித் தலைவரவர்களுடைய அரசு எந்த அளவுக்குச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும், டாக்டர் நாவலர் அவர்கள் எந்த அளவுக்கு சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறபோது அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்,